*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 – 4613**
**Volume VIII (2)**
**May - 2024**

# கவிஞர் ஞானன் படைப்புகளில் மனிதநேயச் சிந்தனைகள்

ஜோஸ்பின் மாலதி சூ,
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர் மற்றும் உதவிப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்,
வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை, தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding Author's mail ID:josephinemalathi@vvvcollege.org**

**ஆய்வுச் சுருக்கம்**

உலகில் காணும் உயிர்கள் அனைத்திடமும் கருணை காட்டலும் பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்காமல் அவ்வுயிர்களைத் தன்னுயிர் போல் நேசித்தலும் மனிதநேயமாகும். இதனை ‘‘மக்கள் தாமே ஆறறிவுயிரே’’ என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார். விலங்கினங்களில் இருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுவதில் முக்கியமானதாக மனிதநேயம் விளங்குகிறது. மக்கள் மனதில் தோன்றும் அன்புணர்வு, இரக்கம், ஈகை, கருணை, பொறுமை முதலானவையே மனிதநேயத்தின் அடிப்படைப் பண்புகளாகும். அன்பு மனம் கொண்டு பிறர் துன்பத்தின் துயர் துடைத்தலும், தொண்டு புரிதலும், வறுமையில் உதவுதலும், பொறுமை கொண்டு பொதுவுடைமையாய் வாழ்தலும் ஆகிய இப்பண்புகளே மனிதத் தன்மை ஆகும். இத்தகைய மனிதத் தன்மைகளே மனித வாழ்வின் உன்னத நிலைக்கு அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. இத்தகைய மனிதநேயப் பண்புகளை உணர்த்தும் விதமாக கவிஞர் ஞானனின் ‘இப்படியும்’ என்ற சிறுகதைத் தொகுப்பும் ‘இனியது புரிவது வாழ்வு’ மற்றும் ‘வறுமை ஒரு தடையல்ல’ என்ற கவிதைத் தொகுப்பும் ஆய்வு எல்லையாக அமைந்துள்ளன.

**குறிப்புச் சொற்கள்**

**மனிதநேயம், அன்புணர்வு, அன்பின்சிறப்பு, அன்பின் வெளிப்பாடு, இரக்கவுணர்வு, நன்றியுணர்வு, பிறருக்கு உதவும் பண்பு.**

## முன்னுரை

சங்ககாலம் முதல் இக்காலம் வரை பண்டைத் தமிழர்கள் மனிதநேயத்தை முதன்மையாகக் கருதுகின்றனர். ஒவ்வொரு மனிதனிடமும் மனிதநேயம் என்பது தவிர்க்க

முடியாத பண்பாக இருக்கின்றது. மனிதநேயம் என்பது மனிதம், மானுடம், மனிதவியல், மனிதாபிமானம், மானிடப்பற்று என்ற சொற்களால் வழங்கப்படுகிறது. இவற்றுடன் அறம், அருள், சமதர்மம், சர்வசமயம், சமரசம் போன்ற கொள்கைகளையே மனிதநேயம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. மனிதநேயம் என்ற உயரிய பண்பாட்டினால் மனிதகுலம் ஏற்றத்தாழ்வுகள் நீங்கி மக்களிடையே அன்பு வளரும். கவிஞர் ஞானனின் படைப்புகளில் இடம் பெற்றுள்ள மனிதநேயச் சிந்தனைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மனிதனின் உணர்வுகள்**

அன்பு, இரக்கம். ஈகை போன்றவை மனிதனுக்குள் இயல்பாய் ஊறும் உணர்வாகும். பிறர் துன்பத்தைத் தன் துன்பமாக எண்ணுவதற்கும், தன் தவற்றை ஒப்புக் கொள்வதற்கும் காரணம் அவனுக்குள் இருக்கும் உள்ளுணர்வு ஆகும். “உறவுகள் அறிவுபூர்வமாகப் பின்னப்படுவதில்லை. உணர்வு என்னும் வலையால் அவை விஸ்தரிக்கப்படுகின்றன” (உதயமூர்த்தி எம்.எஸ்.,மனித உறவுகள், ப.3) என உதயமூர்த்தி கூறுகிறார்.

மனிதநேயம் என்பதற்கும், மனித உறவு என்பதற்கும் நெருக்கம் அதிகம். நேயம், நேசம், அன்பு, யாவும் ஒன்றே. சமுதாயத்தில் வாழும் ஆண், பெண், அனைவரும் ஒருவரைச் சார்ந்து மற்றவர் வாழ, அடிப்படைத்தேவை அன்பாகக் கருதப்படுகிறது. அன்புதான் உறவுகளை உணர்வு வழி நெறிப்படுத்தி மனித உறவாக அமைகின்றது.

‘இப்படியும்’ கதையில் கணவனை இழந்த பெண் தன் மகனோடு பிழைக்க வழியின்றி நிற்கும் சூழலில் அவளுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டிய சுடலைமணியின் மன உணர்வினை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். அவளுடைய மகன் கல்வி கற்க உதவிய சுடலைமணியின் ஈகைப்பண்பு குறிப்பிடத்தக்கதாகும்.

“ரொம்ப நாளைக்கு முன்னாலே எங்க கூட ஒரு பொண்ணு சில நாள் தங்கிச்சி ஒரு மகனோட.. அவள் பிச்சைக்காரி இல்லே, புருஷன் செத்துப் போனதுனால திக்கில்லாம இருந்தா, முழுக்க முழுக்க யோக்யமான பொண்ணு. அவளோட மகன் பள்ளிக்கூடம் போக ஆரம்பிச்சான். அவன் படிக்க நான் கொஞ்சம் உதவி செஞ்சேன்” (இப்படியும், ப.16) என்று சுடலைமணி எழுத்தாளரிடம் கூறுவதிலிருந்து அன்பினால் வரும் உறவு நிலையும் பிறர் துன்பத்தைத் தன்னுடைய துன்பமாக நினைத்து உதவும் மனித நேயப்பண்பும் வெளிப்படுத்தப்படுகிறது.

**அன்புணர்வு**

அன்பு என்பது மூடி வைக்க முடியாத உணர்ச்சி, ஒருவர் அன்புடையவர் என்பதை அவர் பிறருடைய துன்பத்தைக் கண்டு தம்மையறியாமல் கண் கலங்குவதன் மூலம் உணரலாம். இதனை

**“அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கண்ணீர் பூசல் தரும்” (திருக்குறள், எண்.71)**

என்ற குறள் வழி அறியலாம். ‘‘அன்பு ஒருபோதும் உரிமை கொண்டாடாது. அது

எப்போதும் கொடுத்துக் கொண்டேயிருக்கும். அன்பு எப்போதும் துன்புறும். ஒருபோதும் பழிக்குப்பழி வாங்காது" (மாணிக்கவாசகர், ஞா. பேரறிஞர் அண்ணா-பொன் மொழிகள், ப.25) எனப் பேரறிஞர் அண்ணா கூறுகின்றார்.

'ஆருயிர்க்கெல்லாம் அன்பு செயல் வேண்டும்' என்கிறார் வள்ளலார். இது உள்ளத்தில் ஊற்றெடுக்கின்றது. மனிதன், மனிதனிடத்தும் பிற உயிர்களிடத்தும் அன்பு காட்டுதலாலே இவ்வுலகம் உள்ளது. கவிஞர் ஞானனின் 'புதிய மரபுகள்' என்ற கவிதை,

**"மானுடம் என்பது மனிதனை நேசித்தல்**
**மாநிலம் யாவையும் உறவென பாவித்தல்."**

**(இனியது புரிவது வாழ்வு ப.5)**

என்று அன்பின் வழி மனிதனை நேசிக்க வேண்டும் என்கிறது.மேலும் 'கருணை' என்ற கவிதையில்,

**"மலையில் சுரப்பது அருவி**
**மடியில் சுரப்பது பால்**
**மலரில் சுரப்பது தேன்**
**மனதில் சுரப்பது அன்பு"**

**(வறுமை ஒரு தடையல்ல,ப.64)**

என்றுமலையில் சுரக்கும் அருவியைப் போல மலரின் உள்ளே இருக்கும் தேனைப் போல கருணையின் வழி அன்பு சுரக்கிறது. மேலும் அன்பானது மனிதனின் உள்ளத்தில் இருந்து ஊற்றாய் பெருக்கெடுக்கும் என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**மானுடநேயம்**

மானிட வாழ்க்கை தொடங்கிய நாள்தொட்டே மனிதன் உள்ளத்தில் ஆழக்கிடந்திட்ட அன்பெனும் பேரொளி எங்கும் பரவி உலகைத் தன்னுள் ஆக்கிக் கொண்டது. இத்தகு மானுடநேய அன்பினைப் பிங்கல முனிவர்,

**"அளி நார் சங்க நேய மன்பே"**

**(பிங்கலநிகண்டு,நூற்பா - 1770)**

என வகைப்படுத்தினார். அவரே, பின்னும்

**"நெய்யு மண்பு மெண்ணெயுநேயம்"**

**(பிங்கலநிகண்டு, நூற்பா - 3740)**

என்று கூறுவதன் மூலம் நேயம் என்பதே அன்பென்று விளக்குதலை நோக்கலாம். உள்ளத்தின் உணர்விலிருந்து வெளிவரும் உண்மையான அன்பின் ஆழமே மனிதநேயமாக இருப்பதை,

**"எழுத்தினில் பேச்சில் வடித்துமே கொட்டுதல்**
**இல்லையே மானுட நேயம்**
**உளத்தினில் பொங்கி செயலில் வழிவது**
**உண்மையில் மானுட நேயம்"**

**(இனியது புரிவது வாழ்வு, ப.39)**

'மானுட நேயம்' என்ற இக்கவிதை வரிகளில் ஆசிரியர் சுட்டுகிறார்.

கவிஞர் கூறும் மனிதநேயம் எழுவதிலும் பேசுவதிலும் இல்லாது உள்ளத்தில் எழும் அன்பின் செயல்களால் மட்டுமே வெளிப்படும் என்பது புலனாகின்றது. மேலும் இல்லோர்க்கு ஈதல், நல்லறம் செய்தல், பிறர் தரும் துன்பத்தை பொறுத்துக் கொள்ளல் போன்ற பல மனித நேயக்கருத்துகளை எடுத்துக்கூறி அதனால் ஏற்படும் நன்மைகளைச் சுட்டிக்காட்டுகின்றது.

**அன்பின் சிறப்பு**

அன்பினால் இணைந்த உள்ளங்கள் வாழ்வில் எதையும் எதிர்கொள்ளும். அதனால் தான் தெய்வப்புலவர்

திருவள்ளுவர் அன்பின் சிறப்பை வலியுறுத்தும் விதமாய்,

**"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு" (குறள்-80)**

என்று கூறுகிறார். இதனையே கவிஞர் ஞானனும் அன்பு செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார். அன்பின் மூலமாக உறவு தொடரும் நிலையை,

**'அன்பு' என்ற கவிதையில்**

**"அன்பு செய்யக் கற்றுக்கொள்**
**அகிலம் உனதென எண்ணிக்கொள்**
**இந்த உலகின் மக்களெலாம்**
**இனிய உறவென ஒத்துக்கொள்"**

**(வறுமை ஒரு தடையல்ல, பக்.65)**

இவ்வரிகளின் வழி உலகில் உள்ள அனைவரும், ஒருவரை ஒருவர் அன்பு செய்தால் உறவினர்களாக வாழலாம் என்பதையும், அனைத்து உறவுகளையும் இணைக்கும் பாலமாக அன்பு உள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

### அன்புணர்வின் உன்னதம்

அன்புணர்வின் உன்னதத்தை கவிஞர் ஞானனின் 'இப்படியும்' கதையில் சுடலைமணி, எழுத்தாளர் ஆகியோரது பாத்திரப் படைப்பின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார். ஒருமுறை உதவி செய்த ஒருவரை மீண்டும் நீண்ட நாட்கள் கழித்து பார்த்தால் பார்க்காதது போல இருக்கும் சமூகத்தில் சூம்பியகால்களை உடையவராக இருந்தும், தன்மான உணர்வுடன் வாழ்க்கை வாழும் சுடலைமணியின் பண்பு எண்ணத் தகுந்தது.

"அய்யா சவுரியந்தானே. மக பாரதி மெட்ராஸ்ல சவுக்கியமா இருக்கா?" (இப்படியும்,ப.7) என்று சுடலைமணி எழுத்தாளரின் மகளை நினைத்துக் கேட்கும் நிலை அவரது முழுமையான அன்பை வெளிப்படுத்துகிறது.

எழுத்தாளர் மகளின் நலனைக் கேட்பதிலிருந்து முப்பது வருடங்களானாலும் மறக்காமல் நினைவில் வைத்துக் கொண்டிருக்கும் சுடலைமணியின் அன்புணர்வு புலப்படுகிறது.

மனித சமூகத்தின் இயக்கத்திற்குமையமாக அமையும் அன்பியக்கம் இல்லையென்றால் சமுதாயம் செல்லரித்தமரம் போல் ஆகிவிடும். எவருடைய இதயம் உலகம் முழுவதையும் தழுவிக்கொள்ளவும் நேசிக்கவும் திறன் உடையதாக இருக்கிறதோ அவர்களே மிகச்சிறந்த மனிதர்களாக மதிக்கப்படுவர் என்பது புலனாகிறது.

### நன்றியுணர்வு

**"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது**
**மானிடராய் பிறந்த காலையின்**
**கூன் குருடு செவிடு நீங்கி பிறத்தல் அரிது"**

என்ற ஔவையாரின் வாக்கினை மனதில் கொண்டு 'இப்படியும்' சிறுகதையில் கதைமாந்தர்களின் வழி ஆசிரியர் மனிதநேயத்தைச் சித்திரித்துள்ளார். தன்னுடைய கால்கள் சூம்பிய நிலையில் இருந்தாலும் ரயில் நிலையத்தின் நடைமேடையில் அமர்ந்து கொண்டு தன்மான உணர்வுடன் தனக்கென கூலிக்காரர்களை

வைத்துக் கொண்டு பிறருடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்குபவர் சுடலைமணி. முப்பது வருடத்திற்கு முன் உதவியதொகை ஐம்பது ரூபாய் எனினும் அதில் பதினோரு ரூபாய் கொடுத்து உதவிய எழுத்தாளருக்கு நன்றி கூறும் சுடலைமணியின் நன்றியுணர்வு குறிப்பிடத்தக்கதாகும். இக்கருத்தை,

**"ஒருதடவை கலெக்டர்கிட்ட ஐம்பது ரூபாய்**
**கொடுத்தேன். அதரொம்ப பெரிசா சொன்னாங்க"**

**(இப்படியும்,ப.20)**

என்ற தொடர் மெய்ப்பிக்கின்றது.

## இரக்கத்தை வெளிப்படுத்துதல்

**"மனிதர் நோக மனிதர் பார்க்கும்**
**வாழ்க்கை இனியுண்டோ? புலனில்**
**வாழ்க்கை இனியுண்டோ?"**

**(பாரதியார் கவிதைகள்,ப.28)**

என்று மனிதர்களின் இரக்கவுணர்வு குறித்து பாரதியார் குறிப்பிடுகின்றார்.

நாட்டுக்காக உதவிய சுடலைமணியின் இரக்கவுணர்வு பெரிதும் மதிக்கத் தகுந்தது. சில நல்ல மனிதர்கள் எல்லா இடங்களிலும், எந்த சூழ்நிலையிலும் தன்னுடைய நலனைக் கருதாமல் பிறருக்கு உதவும் நோக்கத்தில் இரக்கவுணர்வு கொண்டு வாழ்வதை,

"அடியில நிறைய பழைய அழுக்குத்துணிகளை மடிச்சிப் போட்டு உட்கார்ந்திருப்பாரு. சிலரை மாதிரி பரிதாபமா இறைஞ்சி கத்தமாட்டாரு. ஐயான்னு கை நீட்டுவாரு. கொடுத்தா வாங்கிக்கிடுவாரு. இல்லாட்டி நின்னு நச்சரிக்க மாட்டாரு (இப்படியும்,ப.10) என்று ஆசிரியர் கூறுவதிலிருந்து இக்கட்டான சூழ்நிலையில் இருந்தாலும் தன்மானமுடன் வாழும் சுடலைமணியின் பண்பை அறிய முடிகிறது.

மனிதர்கள் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் போது அவர்களுக்காக இரங்குதல் வேண்டும். அவ்வாறு இரங்காதவன் மனிதனாக கருதப்படமாட்டான். கால் சூம்பிய நிலையில் இருக்கும் சுடலைமணியைப் பற்றி தன் மனைவியிடம் எழுத்தாளர் கூறும்போது அவரது இரக்கவுணர்வு வெளிப்படுகிறது.

## மனிதநேயமிக்க வள்ளலார்

வறியோர்க்கு உதவிசெய்தல், பசிப்பிணியால் வருந்தும் ஏழைமக்களின் பரம்பரையை மாற்றுதல், மக்களிடம் பேதம் பாராட்டாமல் எல்லோரும் ஒன்றெனக் கொள்ளல் இவைகளே வள்ளலார் உணர்த்தும் மனிதநேயமாகும். மக்கள் அனைவரும் பட்டினியின்றி வயிறார உண்டு வாழ வேண்டும். ஏனைய உயிர்களும் உணவுண்டு இனிது வாழ வேண்டும். வறுமையற்ற சமுதாயத்தில் தான் மனிதத்தன்மை நிலைத்து நிற்கும் என்னும் உண்மைகளை உலகிற்கு உணர்த்திய வள்ளலாரை 'மாபெரும்மானுடன்' என்ற கவிதைத் தலைப்பில்,

**"மானுடனாய் பிறந்து**
**மானுடனாய் வாழ்ந்து**
**மனித குலத்தை நேசித்து மறைந்த**
**மாபெரும்மானுடன்.**

**(இனியது புரிவது வாழ்வு, ப.58)**

என்ற வரிகளின் வழி வள்ளலார் மனிதனாகப் பிறந்து மனிதனாக வாழ்ந்து மனித குலத்தை நேசித்து இறைத்தன்மையோடு மறைந்தவரின்

மனித நேயப்பண்பு போற்றுதலுக்குரியது. மனித நிலையின் மேம்பாடுகளான அன்பும், அருளும், பண்பும் பாசமும் பரிதவிப்பும் உயிர்ப்புடன் விளங்குகின்ற நிலையையும், மனிதனுக்கு மனிதன் நேசத்தை வளர்த்தால் அவன் உள்ளத்திற்குள்ளேயே தோன்றும் தெய்வநிலையையும் உணர முடிகிறது.

**பிறர்நலம் பேணும் மனித நேயம்**

'நாய்வால்' சிறுகதையில் தலைமைப் பாத்திரத்தின் பெயரும், அவரின் மனைவியின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. வீட்டுக்காரரை போலீஸ்காராகவும் அவரின் மனைவியை படைப்பாசிரியர் ராட்சசப் பொண்டாட்டி எனவும் வர்ணிக்கிறார்.

ஒருநாள் நடு இரவு நல்ல மழைபெய்து கொண்டிருக்க, போலீஸ்காரர் வீட்டில் யாரும் இல்லாத நிலையில், ஆட்டுக்குட்டி, குட்டிபோட முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறது. பக்கத்து வீட்டுக்காரரைப் பற்றித் தெரிந்தும் இவர் ஆட்டுக்கு உதவிசெய்யத் துடிப்பதைக் கண்டு அவரின் மனைவி, "பூட்டின காம்பவுண்டுச் சுவருக்குள்ளே நிக்குது ஆடு, உள்ளே போனால் வீட்டை உடைச்சி சாமானைத் திருடிக்கிட்டான்னு நம்பமேல கேஸ் போடுவான் அந்தாளு" (நாய்வால், ப.45) எனக் கூறுவதன் மூலம் பக்கத்துவீட்டுப் போலீஸ்காரரின் குணத்தை அறிய முடிகிறது.

இத்தகைய இக்கட்டான சூழலிலும் பக்கத்துவீட்டுக்காரர் மனது கேட்காமல் ஆடு பிரசவத்திற்கு இராமுக்கோனாரின் உதவியால் ஆட்டுக்குப் பிரசவம் பார்க்கிறார். ஆட்டையும் ஆட்டுக் குட்டியையும் காப்பாற்றினார். இதிலிருந்து ஆட்டுக்குட்டி இறந்து விடக்கூடாது என்று கடும் மழையிலும் சென்று காப்பாற்றிய பக்கத்து வீட்டுக்காரரின் நல்ல உள்ளத்தையும், இதனால் தனக்கு ஏற்படும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளும் மனிதநேயத்தையும் அறிய முடிகிறது. தனக்கு துன்பம் ஏற்படக் கூடிய சூழலிலும் பிறருக்காக உதவி செய்யும் மனம் பெரிது என்பதை இச்சிறுகதை படம்பிடித்துக் காட்டுகின்றது.

மனித நேயத்தை வளர்ப்பது, வலுப்படுத்துவது அன்புதான். நல்ல அன்பான இதயத்தில் தான் இரக்கம் வளரும். மனித நேயமும் மலரும். இத்தகைய மனிதநேயம் சுடலைமணியின் அன்புகாட்டும் நிலை, நன்றியுணர்வு, இரக்கவுணர்வு, அன்பின் உன்னதம், அன்பின் சிறப்பு ஆகியவற்றில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. எல்லா உயிர்களையும் சமமாக எண்ண வேண்டும், எல்லா உயிர்களுக்கும் உதவி புரிய வேண்டும் என்பதுதான் மனித நேயப்பண்பாளர் வள்ளலாரின் சிந்தனையாகும். மனித நேயம் பல வழிகளில் வெளிப்படுகிறது. ஆனால் படைப்பாசிரியர் உணர்த்தும் மனிதநேயம் சமகாலச் சமுதாய நிலையை சிந்திக்க வைத்து இளைஞர்களிடையே மனிதநேயத்தை உருவாக்கும் முயற்சியாக வெளிப்படுகிறது.

**துணைநூற் பட்டியல்**


1. சுப்பிரமணிய பாரதி.சி, (2011). பாரதியார் கவிதைகள், சுவாமிமலை பதிப்பகம், சென்னை.
2. ஞானன்.செ, (2004). இப்படியும் ஞானக்குயில் பதிப்பகம், சிவகாசி.
3. ஞானன்.செ, (2004). இனியது புரிவது வாழ்வு, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.
4. ஞானன்.செ, (2003). வறுமை ஒரு தடையல்ல, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.
5. பேராசிரியர் மாணிக்கம்.அ,(2007). திருக்குறள் தெளிவுரை, தென்றல் நிலையம், சிதம்பரம்.